# பிரபஞ்சத்தைப் பற்றியும் - இயற்கை வளங்களின் பண்புகளும்

இயற்கையில்லை என்றால் மனிதனின் வாழ்க்கை இவ்வுலகில் இல்லை. ஏன் என்றால் உயிர் இனங்கள் என்பது ஒன்றை ஒன்று சார்ந்து வாழும். இந்த மிகப்பெரிய வாய்ப்பை நமக்கு வழங்கிவருவது இயற்கைதான் என்பதை நாம் உணர வேண்டும். இதனை மிகத் தெளிவாக நம் முன்னோர்கள் உணர்நததால்தான் மக்கள் தங்களின் வாழ்வை இயற்கையோடு இணைந்தே வ ாழ்ந்து வந்தார்கள். இயற்கையை அவர்கள் நேசித்தார்கள். இயற்கையை காத்தார்கள். கடவுளின் படைப்பானது மனிதன், இயற்கை ஆகையாலே நமது முன்னோர்கள் இயற்கையோடு ஒன்றியே வாழ்நதார்கள். ஆனால் மனிதனின் படைப்புகளான செய்றகையானது கடவுள் படைத்த இயற்கையோடு சேர்க்க முடியாது, மனிதன் அல்லாத இவை அனைத்தும் இயற்கையே. மலையும்மடுவும் இயற்கை. மணலும் மழையும் இயற்கை, முகிலும் இடியும் இயற்கை. காற்றும் கடலும் இயற்கை. மழையும் செடியும் இயற்கை. இதைப் போல கடவுள் படைத்த படைப்பில் மிக முக்கியமானதாக கருதப்படும் மனிதனுக்கு தேவையான அடிப்படை விஷயங்கள் அனைத்துமே இயற்கையானவைகளே. மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவைகளும் இயற்கையே என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கை என்பது மனிதனோடு தொடர்புடையது. மனிதனைவிட மிகவும் பலமடங்கு ஆற்றல் வாய்ந்தது. ஒவ்வொரு மனிதனும் இயற்கையோடு இணைய வேண்டும். பிரபஞ்சம் என்பது ஆகாயம், சூரியன், நட்சத்திரங்கள், பூமி, காற்று, நீர், நிலம், புல், பூண்டு, விலங்கு. மனிதன் இயற்கை என எல்லாம் சேர்நத மொத்த அமைப்பு மட்டும் அனைத்தையும் தன்னுள் அடக்கியது பிரபஞ்சம்தான். இந்த பிரபஞ்சத்தில் இயற்கையோடு மனிதன் ஒன்றி வாழ்கிறான் என்பதை நாம் உணர வேண்டும். இந்த பிரபஞ்சத்திற்கு எல்லை என்பது கிடையாது. அதனுடைய எல்லை என்பது மிகப் பெரியது. இதுவரை யாரும் எந்த ஒரு அறிவியல் முன்னேற்றத்தின் பலனாக அவர்களால் எல்லையை கூறமுடியவில்லை.

**இந்த பிரபஞ்சத்தில் பல லட்சக்கணக்கான நட்சத்திரங்களும், கிரகங்களும், கோள்களும் என்று ஆகாயத்தில் நிறைந்து உள்ளன. நாம் வாழும் பூமியான இந்த அண்டத்தில் ஒரு கிரிக்கெட் பந்து இருப்பது போல் உள்ள நமது பூமியானது அண்டத்தில் தொங்கிக் கொண்டு இருக்கிறது என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அந்த பூமியானது உருண்டை வடிவில் இருக்கும் பந்தைப் போல அதில் நாம் அனைவரும் நம்மால் உருவாக்கப்பட்ட அறிவியல் வளர்ச்சியால், விஞ்ஞானம் வளர்ச்சியால் மனிதனால் உருவாக்கப்பட்ட அனைத்து கண்டுபிடிப்புகளும் உருண்டை வடிவ அமைப்பை கொண்ட இந்த**

**பூமியில் மேற்புறத்தில் ஒட்டி கொண்டு வாழ்கின்றோம் என்பதை நாம் நினைவில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த உருண்டை வடிவ அமைப்பை கொண்ட பூமியானது கீழே விழுந்தால் அது எங்கே செல்லும். மேலே போனால் எங்கே செல்லும்.அருகில் உள்ள கிரகங்களோடு ஒன்றையொன்று உரசிக் கொண்டால் என்ன நிலையாகும் என்பதை நாம் உணர வேண்டும். அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் இந்த பூமியானது வேறொரு கிரகத்தில் இருந்து பார்க்கும்போது நாம் வாழும் இந்த பூமியானது நீல நிறமாக தெரியும். அதாவது இந்தப் பூமியானது, நாம் வாழும் உலகில் நாம் ஒன்றை நன்கு உணர வேண்டும். தொலைவில் இருந்து பார்க்கும்போது கடல் நீர்தான் தெரியும். அந்த கடல் நீரின் நிறம் நீல நிறமாகும். நாம் வாழும் இந்த பூமியானது மிக அரிதானது. இவை நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு அதில் ஒரு பாகத்தில் மனிதர்களாகிய நாம் அனைவரும் காடு, மலைகள், விலங்குகள் என்றும் மனிதன் கண்டுபிடித்த படைப்புகள், மனிதனால் தனக்கு சொந்தம் என்று சொல்லக்கூடிய பொருட்கள், அனைத்தும் இந்த உலகத்தில் ஒரு பாகத்தில்தான் வாழ்ந்து வருகிறோம் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மிஞ்சியிருக்கும் மூன்று பாகங்களும் கடல் நீரால் சூழப்பட்டுள்ளது.**

ஆகையால் நாம் வாழும் இவ்வுலகில் நமது முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வந்தார்கள். இயற்கையைக் கண்டு பயந்து அதை புரிந்தும் வாழ்ந்தார்கள்.

ஆனால் இன்றைய உலகில் நாம் அனைவரும் நாகரிக உலகில் மாட்டிக் கொண்டு அதிலிருந்து விடுபடமுடியாமல் வாழ்ந்தும், இயற்கையான விஷயங்களை மறந்தும் வாழ்ந்து வருகின்றோம். மனிதனுக்கு இயற்கை என்பது ஒரு நல்ல நண்பனாகவும், மனிதன் இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கும், மற்ற ஜீவராசிகள் உயிர் வாழ்வதற்கும் இயற்கை என்பது பக்க பலமாக இருந்து வருகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனிதனை விட இயற்கையின் ஆற்றலின் பலம் மிக பெரியது. இயற்கை இவ்வுலகை அழிக்க நினைத்தால் கண் இமைக்கும் நேரத்தில் அழித்துவிடும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**இயற்கையோடு இணைந்திடுவோம் !**
**ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்கிடுவோம்!!**

**SIDDHAS HEALTHY LIFE ADVISORY CENTRE**